International Journal for Multidisciplinary Research (IJFMR)
E-ISSN: 2582-2160 ● Website: www.ijfmr.com ● Email: editor@ijfmr.com

# நாகஸ்வர இசை வல்லுனர் சின்னமனூர் முனைவர் அ.விஜய்கார்த்திகேயன் அவர்களின் அரிய இராக,தாள இசைப் படைப்புகள்

**Ms. Malarvizhi D[1], Dr. Saravanan A[2]**

[1]Research Scholar, Faculty of Fine Arts, Music Department, Annamalai University
[2]Asst.Professor, Faculty of Fine Arts, Music Department, Annamalai University

**ஆய்வுச் சுருக்கம்**

மனித மனம் உணர்வுகளால் நிரம்பப் பெற்றது. பிறப்பு முதல் இறப்பு வரை இசை நீங்கா இடம் பெற்றுள்ளது. இத்தகைய இசையை இன்று நாடு போற்றும் வகையில் நம் முன்னோர்கள் அதன் சிறப்புகளைச் செம்மையாக செய்து வருகின்றன. மேலும் வளரும் கலைஞர்களுக்கு கற்பதற்கு எளிதான முறையிலும் வடிவமைத்துள்ளனர். அவ்வாறு முனைவர் திரு அ. விஜய் கார்த்திகேயன் அவர்களால் வடிவமைக்கப்பட்ட சில அரிய படைப்புகளைக் காண்பதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தேனி மாவட்டம் சின்னமனூரைச் சேர்ந்த தெய்வத்திரு. அர்ஜுனன்-கிருஷ்ணவேணி தம்பதியருக்கு 1978 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் திரு விஜய்கார்த்திகேயன். .இவர் இசையின் மேல் கொண்ட ஆர்வத்தின் அடிப்படையில் தனது 9 ஆவது வயது முதல் இசை கற்க ஆரம்பித்தார். பிறகு நாகஸ்வரத்தின் மேல் உண்டான ஆர்வத்தின் காரணமாக இவருடைய

தாத்தாவான நாகஸ்வர வித்வான் சின்னமனூர் தெய்வத்திரு சி. வி கணேசன் மற்றும் தெய்வத்திரு தருமபுரம் அ. கோவிந்தராஜன் அவர்கள் திருப்பாம்புரம் சகோதரர்கள் ஸ்ரீ T.K.S ஸ்வாமிநாதன் மற்றும் T.K.S மீனாக்ஷி சுந்தரம் போன்ற பல குருநாதர்களிடம் நாகஸ்வரம் மற்றும் வாய்பாட்டும் கற்றுத் தேர்ந்தார். அகில இந்திய வானொலியில் A TOP GRADE பெற்றவர். தற்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நாகஸ்வர பேராசியராக பணியாற்றி வருகிறார்.

**அரிய இராக படைப்புகள்;**

| **இராகம்** | **தாளம்** | **கீர்த்தனை** |
|---|---|---|
| ஸ்ரீஜெய் | ரூபகம் | சங்கரி பரமேஸ்வரி |
| நாராயணி | மிஸ்ர சாபு | பாஹிமாம் ஸ்ரீவைஷ்ணவிதேவி |
| குணவதி | கண்ட சாபு | உன்னையல்லால் யார்கதி |
| பாலினி | மிஸ்ர சாபு | பாஹிமாம் ஸ்ரீமாஹாதேவம் |
| சூஷ்மரூபிணி | ரூபகம் | இந்திராணிதேவி |
| சாருவர்தினி | ரூபகம் | சிவ சிவ என்றுரைத்திடும் |
| கௌமாரி | ஆதி | கௌமாரிஅம்ப |
| ஜெயபவானி | கண்ட சாபு | மாரியின் பதம் பணிவோம் |

**அரிய தாள படைப்புகள்**

| **இராகம்** | **அரிய தாளம்** | **கீர்த்தனைகள்** |
|---|---|---|
| கரஹரப்பிரியா | விஷம தாளம் | வருவாய் வரமருள்வாய் |
| நளினகாந்தி | சந்ததாளம் | கந்தனின் பதம் துணையே |
| கேதாரம் | ஆதி-த்விகதி | தரிசனம் தாரும் ஐயா |

**சில இராகங்களின் விளக்கம்;**

(i)**பாலினி**

கர்நாடக இசையில் பயன்படும் இராகங்களில் இதுவும் ஒன்றாகும். இது 14 ஆவது மேளகர்த்தா இராகமாகிய 3 ஆவது சக்ரமாகிய அக்னியின் 2 ஆவது இராகம் வகுளாபரணத்தின் ஜன்னிய இராகமாகும்.

| | |
|---|---|
| ஆரோகணம் | ஸ ரி க ப நி ஸ் |
| அவரோகணம் | ஸ் நி ப க ரி ஸ |

இந்த இராகத்தில் ஷட்ஜமம்,சுத்த ரிஷபம், அந்தரகாந்தாரம். பஞ்சமம், கைசிகநிஷாதம் ஆகிய ஸ்வரங்கள் வருகின்றன. காலையில் வாசிக்க கூடிய இராகம். கபாலினி திரிசூலினி கீர்த்தனை உள்ளது.

(ii)**சூஷ்மரூபிணி;**

**ஆரோகணம்; ஸ ரி ம ப த ஸ்**

**அவரோகணம்; ஸ் த ப ம ரி ஸ**

இந்த இராகம் 19 ஆவது மேளகர்த்தாவாகிய ஜம்காரத்வனியில் ஜன்யம். இது ஒரு ஔடவ-ஔடவ இராகமாகும். ஷட்ஜமம், சதுஸ்ருதி ரிஷபம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்த போன்ற ஸ்வரங்களைக் கொண்டது. இனிமையான ரஞ்ஜகத் தன்மையை ஏற்படுத்தக் கூடிய இராக வகையைச் சார்ந்தது. ரிஷபம் ஜீவ ஸ்வரமாக காணப்படுவதால் நீண்ட ஆலாபனை செய்ய ரிஷபம் ஏற்ற ஸ்வரமாகும். இந்த இராகத்தை அறிமுகம் செய்தவர் பிரபல இசை மேதை டாக்டர். M.பாலமுரளி கிருஷ்ணா அவர்கள் ஆவார். திரு விஜய்கார்த்திகேயன் இந்திராணி தேவி என்ற சப்த மாதர்கள் குறித்த 7 கீர்த்தனைத் தொகுப்பில் ஒரு கீர்த்தனை உள்ளது.

(iii)**ஸ்ரீ ஜெய் ;**

**ஆரோகணம்; ஸ க ப நி ஸ்**

**அவரோகணம்; ஸ் நி ப க ஸ**

இந்த இராகம் 29 வது மேளமான தீரசங்கராபரணத்தில் ஜன்யம். இதற்கு சங்கரி என்ற வேறு பெயரும் உண்டு. சுராந்திய இராக வகையைச் சேர்ந்தது

அதாவது நான்கு ஸ்வரங்களைக் கொண்டது. இந்த இராகம் வழக்கத்தில் அரிதான இராகமாக கருதப்படுகிறது. நாகஸ்வர மேதை தமிழிசை வாக்கேயக்காரர் தருமபுரம் தெய்வத்திரு அ.கோவிந்தராஜன் அவர்கள் பாதம் பணிந்து என்ற வர்ணம் திஸ்ர ரூபகத்தில் இயற்றியுள்ளார். இது அபிராமி இசை வண்ண மாலை என்ற நூலில் 59 ஆவது பக்கத்தில் அமைந்துள்ளது. இவருடைய மாணவர் முனைவர் அ. விஜய் கார்த்திக்கேயன் இந்த இராகத்தில் கீர்த்தனை இயற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. காந்தாரம் ஜீவ ஸ்வரமாகும். ரிஷபம், மத்தியமம், தைவதம் வர்ஜமாகும்.

**அரிய தாள படைப்புகள்** ;

(i)**விஷம தாளம்**;

விஷம தாளம் என்பது வழக்கத்தில் இருக்கும் தாளங்களில் இருந்து மாறுபட்டு அரிதாக காணக்கூடிய தாளங்கள் விஷம தாளம் எனப்படும். உதாரணமாக சந்தப்பாவலப் பெருமான் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் அமைந்த சந்த தாளங்கள் விஷம தாளம் என்றழைக்கப்படுகிறது.

(ii)**ஆதி (திவிகெதி-லகு,திஸ்ரகெதி,துரிதம்,சதுசர கெதி**);

திவிகெதி என்பது பூர்வாங்கம் ஒரு கெதியும், உத்திராங்கம் கெதியும் ஒரு அமைவதாகும். இவை எந்த தாளமாகவும் இருக்கலாம். உதாரணமாக லகுவானது திஸ்ர கெதியிலும் உத்தராங்கம் சதுர்ஸ்ர கெதியிலும் அமையலாம். இரு வேறுபட்ட கெதிகளை இணைப்பதே திவிகெதி எனப்படும். இது போன்ற அமைப்பில் முன்னோர்கள் பல்லவி இசைத்துள்ளனர். முதுபெரும் நாகஸ்வரமேதை தெய்வத்திரு தருமபுரம் கோவிந்தராஜன் அவர்கள் மைசூரில் கண்டகெதி மற்றும் திஸ்ர கெதியியை இணைத்து பல்லவி வாசித்துள்ளார்கள். இதற்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக திருக்கடையூர் திரு. T.G பாபு அவர்களும் திரு. நாங்கூர் செல்வகணபதி அவர்களும் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இசைத்துள்ளனர். அதை பின்பற்றி முனைவர் திரு. அ.விஜய்கார்த்திகேயன் அவர்களும் நடராஜர் பாதம் பணிந்து திருவாதிரைத் திருநாள் என்ற சாகித்தியத்தோடு இயற்றியுள்ளார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் இயற்றிய பஞ்சலிங்க ஸ்தல கீர்த்தனையில் ஆனந்த நடன பிரகாசம் என்ற கீர்த்தனை மிஸ்ரசாபு தாளத்தில்

சிதம்பரம் நடராஜர் மேல் கேதாரம் இராகத்தில் அமைக்கப்பட்ட காரணத்தால் தரிசனம் தாரும் என்ற கீர்த்தனையை கேதாரத்தில் இயற்றியுள்ளார்.

**முடிவுரை;**

இசையின் வளர்ச்சி என்பது ஒரு கலைஞனின் இசை

ஆர்வத்தைப் பொறுத்தே அமைகிறது. அவ்வகையில் 35 தாளங்களில் தமிழ் கீர்த்தனைகள், தில்லானாக்கள், மல்லாரிகள் மற்றும் சந்த தாளத்தில் தமிழ் கீர்த்தனைகள், தில்லானாக்கள், பல்லவி மற்றும் பஞ்சரத்னராக பஞ்சமுக தாளத்தில் மல்லாரி மற்றும் பஞ்சரத்னராக பஞ்சமுக தாளத்தில் பல்லவி போன்ற இசைப் படைப்புகளைப் இயற்றியுள்ளார். அவை மட்டுமல்லாது தனது வாழ்நாட்களை இசைக்காகவே அர்ப்பணித்து அரிய இராக தாளங்களை கொண்டு பல உருப்படிகளை இயற்றிய இவ்ஆய்வின் நாயகன் முனைவர் திரு. விஜய்கார்த்திகேயன் அவர்களின் இந்த படைப்புகள் இன்றைய வளரும் கலைஞர்களுக்கு ஓர் உந்துகோளாக அமைவதே இவ்ஆய்வின் பயனாகும்.

**துணை நூற்பட்டியல்**

1. குரு துதி மலர்கள் (35 தாளங்களில் மல்லாரிகளும் , தமிழ் கீர்த்தனைகளும்) ,நூல் ஆசிரியர் டாக்டர் அ . விஜய்கார்த்திகேயன் - 2022
2. *குரு துதி மலர்கள் பாகம் 2 (35 தாளங்களில் தில்லானாக்கள்) ,நூல் ஆசிரியர் டாக்டர் அ . விஜய்கார்த்திகேயன் - 2023
3. இணையதளம்
4. *Youtube.com/@nagaswaramchinnamanurkarth2290